1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இந்த தீவிர வாழைச் சாகுபடித் திட்டம் தற்போது கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதியிலும் நடத்தப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த ஓட்டப்பிடாரத்திற்கு அருகே இருக்கும் வாழை சாகுபடி திட்டத்தால் லாபம் ஏதாவது ஏற்பட்டு இருக்கிறதா, அது ஒழுங்காக நடைபெறுகிறதா, வெட்ப தட்ப நிலை சரியாக இருக்கிறதா என்று விவசாய இலாகாவினால் ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், அந்த முழு விவரங்களையும் தெரிவிக்கிறேன்.

முந்திரி பயிரிடுவோருக்குக் கடன்

*** 481 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முந்திரி பயிரிடுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு கடன் தொகை ஏதேனும் வழங்கி வருகிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த முந்திரித் தொழிலை வளர்ப்பதற்காக எந்தெந்த மாவட்டங்களில் உள்ளவர் களுக்கு கடன் அளிக்கப்பட்டு வருகிறது? ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு தொகை அளிக்கப்பட்டு வருகிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இப்போது முந்திரி அபிவிருத்தித் திட்டம் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 150 விதம் கடன் உதவி முந்திரி சாகுபடிக்கு என்று வழங்கப்பட்டு வருகிறது. முதல் தவணையாக ரூ. 100-ம், இரண்டாம் தவணையாக ரூ. 50-ம் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட நபர்களுக்கு அதிக பட்சமாக ரூ. 3,000 வழங்கப் படுகிறது. கடன் கொடுத்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தவணை தொடங்கப்பட்டு, ஐந்தாண்டு சம தவணை முறையில் கடன் தொகை வசூலிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, தென் ஆற்காடு ஜில்லாவிலிருந்து முந்திரி பயிர் செய்வதற்கு கடன் கோரி அரசுக்கு மனு செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது. அதிலே எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தென் ஆற்காடு மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எத்தனை பேர்களுக்கு என்பதற்கு தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தெரிவிக்கிறேன்.

திரு. சோ. கருணைநாதன்: தலைவரவர்களே, முந்திரி உற்பத்தியைப் பெருக்க அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த கேள்விக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது வரையில் சொன்னதெல்லாம் முந்திரி உற்பத்தியைப் பெருக்க என்னென்ன செய்யப்படுகிறது என்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயத்தில் தொழில் நுட்பப்பள்ளிகள்

* 482 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மையை பெருக்குவதற்கு தொழில் நுட்பப் பள்ளிகளைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) விவசாயத்தில் தொழில் நுட்பப் பள்ளிகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்புகள் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

விற்கப்படாமல் தேங்கியுள்ள உரம்

* 483 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஜனவரி முதல் ஜூலை முடிய தமிழ்நாடு அரசிடம் விற்காமல் தேங்கி இருந்த உர வகைகளின் மதிப்பு எவ்வளவு ரூபாய்?